**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 308/2013**
**நாள்.12.08.2025**
**வா.சா.3- தங்கராஜ்**
**த/பெ - முருகன்**
**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. தாவா சொத்துக்கள் கெங்கையூரில் அமைந்துள்ளது என்றால் சரிதான். கெங்கையூர் நான் வசிக்கும் ஊரில் இருந்து 1 1/2 கி.மீ தொலைவில் உள்ளது.

2. நான் கூலி வேலை செய்கிறேன். நான் தனியாகவும் கூலி வேலைக்கு சொல்வேன். நான் அவ்வாறு கூலி வேலைக்கு செல்லும்போது நான் செய்யும் இடத்திற்கான சர்வே எண் மற்றும் விஸ்தீரணத்தை தெரிந்து கொண்டு தான் வேலைக்கு செல்வேனா என்றால் இல்லை.

3. வேலைக்கு சென்ற பின்பும் வேலை செய்யும் இடத்தில் சர்வே எண், விஸ்தீரணம் பற்றி தெரிந்துகொள்வேனா என்றால் இல்லை.

4. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும்

5. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்துக்களின் சர்வே எண்.1621/2F, 1621/2G ஆகியவை பற்றி எப்படி தெரியும் என்றால் நான் 40 வருடங்களாக வேலை செய்து வருகிறேன். அதனால் தெரியும்.

6. வழக்கின் பிரதிவாதிகளின் தோட்டத்திற்கும் கடந்த 40 ஆண்டுகளாக வேலைக்கு சென்று வருகிறேன். பிரதிவாதிகள் தோட்டத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது

7. கண்ணையா சொல்லிக்கொடுத்து தாவா வழக்கின் சர்வே எண் பற்றி நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

8. தாவா வழக்கின் மின் இணைப்பு எண் பற்றி தெரியுமா என்றால் தெரியும், பழைய எண்.127, புதிய எண்.190 ஆகும்.

9. எதனால் பழைய எண்.127 என்பது புதிய எண்.190 ஆக மாறியது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

10. தாவா சொத்தில் மின் இணைப்பு எண் பற்றி எப்படி தெரியும் என்றால் நான் வேலை செய்து வந்ததாலும், அவ்வாறு வேலை செய்யும்போது மோட்டார் போடுவதாலும் தெரியும்.

11. தற்போது தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பு பெட்டியில் எண் 190 எழுதப்பட்டுள்ளது.

12. பழைய எண்.127 எங்கு உள்ளது என்றால் அதையும் சேர்த்து எண் 127+190 ஆக எழுதப்பட்டுள்ளது

13. சர்வீஸ் யார் பேரில் உள்ளது என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

14. மின் கட்டண அட்டையை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்றால் கண்ணையா மற்றும் வள்ளிநாயகம் ஆகியோர் பெயர்கள் எழுதப்பட்டுள்ளது.

15. பழைய எண்.127 மற்றும் புதிய எண்.190க்கான 2 அட்டைகளிலும் கண்ணையா மற்றும் வள்ளிநாயகம் ஆகியோர் பெயர்கள் எழுதப்பட்டிருந்ததை பார்த்தேன்.

16. பிரதிவாதிகள் தோட்டத்தில் என்ன பயிர் செய்யப்பட்டுள்ளன என்றால் தென்னை மற்றும் வாழை பயிர் செய்யப்பட்டுள்ளன. 2 பயிர்களும் மானாவரி பயிர்கள் இல்லை என்றால் சரிதான்.

17. தாவா சொத்தில் உள்ள கிணற்றில் இருந்து தான் மேற்படி பயிர்களுக்கு நீர் பாய்ச்சபடுகிறது என்றால் சரியல்ல.

18. தென்னை மற்றும் வாழைக்கு எங்கு இருந்து நீர் பாய்ச்சப்படுகிறது என்றால் அதற்கென உள்ள தனி கிணற்றிலிருந்து நீர் பாய்ச்சப்படுகிறது. அந்த கிணற்று சர்வீஸ் எண் தெரியாது, அந்த கிணறு எந்த சர்வே எண் கீழ் உள்ளது என்றால் தெரியாது.

19. வாதி சொல்லிக்கொடுத்து தாவா சொத்தின் சர்வே எண், கேணி, அதில் உள்ள மின் இணைப்பு எண் பற்றி நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

20. வாதி எனக்கு பழக்கமானவர், உறவினர் இல்லை.

21. தாவா சொத்து பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது என்றாலும், வாதி சொல்லிக்கொடுத்து அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**(மேற்கண்ட குறுக்குவிசாரணையை 4 முதல் 6 பிரதிவாதிகள் adopt செய்துகிறார்கள்)**

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

PETER B Digitally signed by PETER B

**Principal District Munsif**
**Vedasandur**